# அரசு கலைக் கல்லூரி [தன்னாட்சி], கோவை - 18.

## தமிழ்த் துறை

## இளங்கலை - அறிவியல், வணிகவியல்

## முதலாமாண்டு - முதல் பருவம்

## பகுதி - I . தமிழ் . தாள் - I

## [2018 - 2021]

[விழுமியம், செய்யுள், சிறுகதை - மொழித்திறன், படைப்பாற்றல்]

### தொகுப்பாசிரியர்கள்

[கௌரவ விரிவுரையாளர்கள்]

அலகு : I - முனைவர் ப. கீதா

அலகு : II - முனைவர் ப. வித்தியாவதி

அலகு : III - முனைவர் ப. வித்தியாவதி

அலகு : IV - முனைவர் அ. ரேவதி

அலகு : V - முனைவர் ப. கீதா

அரசு கலைக் கல்லூரி [தன்னாட்சி], கோவை-18

முதலாமாண்டு இளங்கலை, அறிவியல், வணிகவியல்

பகுதி - I தமிழ்ப்பாடத் திட்டம் [2018 - 2021]

முதல் பருவம் - தமிழ் - தாள் - I - 18TAM11L

அலகு : I. (அ). செய்யுள்

ஆன்மிகம் - பாரதியார்

1. கேட்பன
2. சுதந்திர தேவியின் துதி [4 பாடல்கள்]
3. யோகசித்தி வரங்கேட்டல் [4, 5, 7 பாடல்கள்]

சமூகம்

1. உலக ஒற்றுமை } - பாரதிதாசன்
2. புத்தக சாலை }
3. ஒற்றுமையே உயிர்நிலை - கவிமணி
4. தில்லை நதிக்கரை வயல்களுடன் ஒரு மறுவிவாதம் } - நா.காமராசன்

வாழ்வியல்

1. எல்லாம் நானே - கண்ணதாசன்
2. மழைக் குறிப்பு - தாமரை
3. முளைக்காத புதையல் - க்ருஷாங்கினி

அலகு : II. (ஆ) செய்யுள்

சூழலியல்

1. எரியும் காட்டுக்குயில்கள் - நீலமணி

பெண்ணியம்

1. அவமானப்படுத்தப்பட்டவள் - சிவரமணி
2. எதை நினைத்தழுவதும் சாத்தியமில்லை - ஔவை
3. கருவறை ஓலங்கள் - கவிதாசன்

4. என் பூர்வீக வீடு - சல்மா

5. படிமக் காட்சிகள் - இளம்பிறை

6. பிரயாசங்கள் - தேன்மொழி

அலகு - III - சிறுகதைகள்

தேர்ந்தெடுக்கப்பட்ட 8 சிறுகதைகள் : [தமிழ்த்துறை வெளியீடு]

(அ). 1 - 4 : சிறுகதைகள்

1. குளத்தங்கரை அரசமரம் - வ. வே. சு. ஐயர்
2. ஒரு நாள் கழிந்தது - புதுமைப்பித்தன்
3. நாக்கு - ஜெயமோகன்
4. இந்த யுகம் பூத்துக் குலுங்குமடி - மோகன்

(ஆ) 5 - 8 : சிறுகதைகள்

5. தேவகியைத் தேடி... - ஆர். சூடாமணி.
6. அழுகபிள்ளை - சிவகாமி
7. இயல்பு - எஸ். ராமகிருஷ்ணன்
8. தலை மாணாக்கன் - இறையன்பு

அலகு : IV : இலக்கணம்

(அ) 1. படிமம், தொன்மம், குறியீடு.
2. நான்கு வகைச் சொற்கள் [பெயர், வினை, இடை, உரி]

(ஆ) ஊடகச் செய்தி வரைவுகள்

1. மாநகரச் செய்திகள், 2. மாநிலச் செய்திகள்
3. அவசரச் செய்திகள்.

இலக்கிய வரலாறு

(அ.) 1. புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்
(ஆ.) 2. சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்.

அலகு : V. படைப்பாற்றல்

1. கோட்பாட்டுத் தொடர்கள்

(அ.) முழக்கங்கள் அமைக்கல் : சுற்றுச் சூழல், சுகாதாரம், சாலை விதிகள், மனித உரிமைகள் பாதுகாப்பு, விளம்பர வாசகங்கள், பேரிடர் மேலாண்மை.

(ஆ) புது மொழிகள் அமைத்தல் :

பழைய பழமொழிகளைச் சூழல் (அ) துறைகளுக்கு ஏற்ற வகையில் புதுமையான மொழிகளாக அமைத்தல்.

2. (அ) பழைய கதை இலக்கிய நிகழ்வுகளை நீதி, அறம், புலப்படும்படி மறு ஆக்கம் செய்தல்.

1. புராணக் கதை நிகழ்வுகள்
2. காப்பியக் கதை நிகழ்வுகள்
3. சங்க இலக்கிய நிகழ்வுகள்.

(ஆ) மொழிபெயர்ப்பு - பொது நிலை.

## அரசு கலைக் கல்லூரி [தன்னாட்சி], கோவை - 18

## முதலாமாண்டு இளங்கலை , அறிவியல் , வணிகவியல்.

## பகுதி - I. தமிழ்ப்பாடத் திட்டம் [2018 - 2021]

## முதல் பருவம் - தமிழ் - தாள். I - 18TAM11L

### அலகு : I : செய்யுள். -(அ)

**ஆன்மீகம் :**

1. கேட்பன
2. சுதந்திர தேவியின் துதி [4 பாடல்கள்
3. யோகசித்தி வரங்கேட்டல் [4.5, 7 பாடல்கள்]

} - பாரதியார்

**சமூகம் :**

1. உலக ஒற்றுமை
2. புத்தகசாலை

} - பாரதிதாசன்

3. ஒற்றுமையே உயிர் நிலை — கவிமணி
4. முல்லை நதிக்கரை வயல்களுடன் ஒரு மறுவியாதம் } — நா. காமராசன்

**வாழ்வியல் :**

1. எல்லாம் நானே — கண்ணதாசன்
2. மனைக் குறிப்பு — தாமரை
3. முளைக்காத புதையல் - க்ருஷாங்கினி.

## அலகு - I

## அ. செய்யுள்

### ஆன்மீகம் - மகாகவி பாரதியார்

**ஆசிரியர் குறிப்பு:**

பாரதியார் திருநெல்வேலி மாவட்டம் எட்டையபுரத்தில் 11-12-1882-ஆம் ஆண்டில் பிறந்தார். இவருடைய பெற்றோர் சின்னசாமி இலக்குமி அம்மாள். இளமையிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்றதால் எட்டையபுர அரசவைக் கவிஞரானார். பாரதி என்ற பட்டம் வழங்கி சிறப்பித்தது எட்டையபுரத்து அரசாங்கம். ஆங்கிலக் கவிஞர் ஷெல்லியின் கவிதைகளில் ஈர்க்கப்பட்டு 'ஷெல்லிதாசன்' எனப்புனைபெயர் வைத்துக் கொண்டு சக்திதாசன் என்ற பெயரிலும் கவிதைகள் எழுதினார். சுதேசமித்திரன் நாளிதழின் துணையாசிரியராக, சக்கரவர்த்தினி மாத இதழின் பொறுப்பாசிரியராக, இந்தியா வார இதழின் ஆசிரியராக, பாலபாரத ஆங்கில இதழின் ஆசிரியராகப் பணியாற்றியவர். மரபுக் கவிதைக்கும் புதுக்கவிதைக்கும் பாலம் அமைத்த புதுமைக் கவிஞன். முதன் முதலில் வசன கவிதையை உருவாக்கியவர். இவர் எழுதிய முப்பெரும் காவியங்கள் கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம் என்பவையாகும். நாடு, மொழி, தேசம், ஒருமைப்பாடு எனும் நோக்கில் தனது சிந்தனையைச் செலுத்தி 'மகாகவி' என்று அழைக்கப்பட்ட பாரதி 39 ஆண்டுகளே வாழ்ந்து 02-09-1921-ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

### பாடல்: 1. கேட்பன.

**பொருள் விளக்கம்:**

நல்லதோர் வீணையை செய்து அதன் நலம் கெடும்படி புழுதியில் எறிவார்களா? சிவசக்தியே என்னை சுடர்மிகு அறிவுடன்

படைத்திருக்கின்றாயே. இந்த மாநிலம் பயனையும் வகையில் என்னுடைய கவித்திறம் பயனுற எனக்கு வல்லமை தாராயோ என்று கேட்கின்றார். அப்படியல்லாமல் நிலச்சுமையென வாழும்படி செய்துவிடுவாயோ என்கிறார்.

விசையுறு பந்தினைப் போன்று உள்ளம் வேண்டிய படிசெல்லும் உடலையும், நசையறு மனமும், நித்தம் நவமெனச் சுடர்தரும் உயிரினையும் கேட்கின்றார். மேலும் தசையினைத் தீச்சுடினும் சிவசக்தியைப் பாடும் நல் மனத்தினையும், அசைவறு மதியினையும் கேட்கின்றார். இவை அனைத்தையும் அருள்வதில் உனக்கேதுந் தடையுள்ளதோ? என்று பாரதி கேட்கின்றார்.

## பாடல் : 2. சுதந்திர தேவியின் துதி.

பொருள் விளக்கம் :

இனிமையான இல்லத்தை விட்டு நீங்கி துன்பம் தரும் சிறையில் அகப்பட்டாலும்; பதந்திரு இரண்டும் மாறிப் பழிமிகுந்து இழிவு ஏற்பட்டாலும்; விதவிதமாக கோடி இன்னல் விளைந்து என்னை அழித்திட்டாலும் சுதந்திர தேவியே உன்னை துதிக்க நான் மறக்க மாட்டேன்.

நின்னருளைப் பெறாதவர்கள் பெரும் செல்வந்தர்களாக இருப்பினும் கல்வி கேள்வி படைத்துயர்ந்தவர்களானாலும், எண்ணிலாத பெருமையிற் சிறந்தாரேனும் அவர்களது வாழ்க்கை பாழாம் அவர்கள் பிணத்திற்கு ஒப்பர்.

சுதந்திர தேவியே! நின் ஒளி பெறாத தேசம் தேசமாகுமோ? ஆவியங்கு உண்டோ? செம்மை அறிவுண்டோ? ஆக்கமுண்டோ? காவிய நூல்கள் ஞானக் கலைகள் வேதங்கள் உண்டோ? உன்னைப் போற்றிப் பாடாதோர் பாவியர். என்கிறார்

நீங்காத நோயில் சாவார், உலகம் என்பதை அறியமாட்டார். கழிவுறு மாக்களெல்லாம் இகழ்ந்திடக் கடையினிற்பார்.

வாழ்க்கையிலும் தேரார் – கனவிலும் இன்பங் காணார் - அழிவற்ற பெருமை தரக்கூடிய அன்னையே நின் அருளைப் பெறாதவர் வாழ்க்கை இதுவே ஆகும் என்கிறார்.

## பாடல் : 3. யோக சித்தி [வரங்கேட்டல்]

பொருள் விளக்கம் :

தேடிச் சோறுநிதந் தின்று பல சின்னஞ்சிறு கதைகள் பேசி- மனம் வாடித் துன்பத்தில் உழன்று - பிறர் வாட செயல்கள் செய்து நரை கூடிக் கிழப்பருவம் எய்தி - கொடுங் கூற்றுக்கிரையெனப் பின்மாயும் பல வேடிக்கை மனிதரைப் போலே நான் வீழ்ந்து விடுவேன் என்று நினைத்தாயோ? என்கிறார்.

பாரதி சில வரங்களை கேட்கின்றார் அதுவும், நேரே தனக்கு தருவாய் என்று கேட்கின்றார். அவை ; தன்னுடைய முன்னைத் தீயவினைப் பயன்கள் இன்னும் அதிகரிக்காமல் அழிந்துவிட வேண்டும் - என்னைப் புதிய உயிராக்கி கவலையில்லாத - மதியினையும் தெளிவடையச் செய்ய வேண்டும் என்றும் - மகிழ்ச்சி -யுடன் இருக்கச் செய்வாய் என்றும் கேட்கின்றார்.

எண்ணும் காரியங்களில் வெற்றியும், தொழில் புரிய பெருநிதியும் அதில் பல்லோர் துணைபுரிதல் வேண்டும் என்றும் - சுவை மிகு பாடலுடன் தாளம் சேர்ந்து இசைக்கவும் - பல கோடி இன்பம் ஏற்படும் வகையில் பண்ணிசையில் பாடும் திறனும் வேண்டும் என்று வரம் கேட்கின்றார்.

## வினாக்கள்

I. சிறு சொற்களில் விடையளி :

1. மகாகவி பாரதியார் எங்கு எப்போது பிறந்தார்?
2. பாரதியின் பெற்றோர் யாவர்?
3. பாரதியின் புனை பெயர்கள் எவை?

4. 'பாரதி' என்ற பட்டம் எங்கு வழங்கப்பட்டது?

5. "நகையினைத் தீர்ப்பதுவும் இசைக்கதையைப் பாடும் மனத்தினை கேட்டவர் யார்?

II பின்வரும் வினாக்களுக்கு 30 சொற்களில் விடை தருக.

6. பாரதியாரின் முப்பெரும் காவியங்கள் எவை?

7. பாரதியார் பணியாற்றிய இதழ்கள் யாவை?

III பின்வரும் வினாக்களுக்கு 100 சொற்களில் விடை தருக.

8. மகாகவி பாரதியார் சுதந்திர தேவியை துதிக்கும் பாங்கினை விவரி.

9. பாரதியார் யோக சித்தியிடம் வேண்டும் வரங்களை விளக்குக.

## சமூகம்

## 1. உலக ஒற்றுமை 2. புத்தக சாலை.

## பாரதிதாசன்.

அசிரியர் குறிப்பு:

பாரதிதாசனின் இயற்பெயர் சுப்புரத்தினம். புதுச்சேரியில் 29.04.1891 ஆம் ஆண்டு பிறந்தவர். இவரது தந்தை கனகசபை முதலியார். தமிழ் மொழிப் பள்ளியிலும் பிரெஞ்சு மொழிப் பள்ளியிலும் பயின்றவர். தாய்மொழிப்பற்றும் தமிழறிவும் நிறைந்த இவர் முத்தமிழ் அறிஞராக விளங்கினார். சிறுவயதிலேயே இசை பாடல்களைச் சுவைபட எழுதும் ஆற்றல் பெற்றிருந்தார். திருமண விழாவில் பாரதியாரைச் சந்தித்த நேரத்தில் பாரதிதாசனின் பாட்டுத்திறத்தைச் சோதிக்க 'பாடு' என்ற உடனேயே 'எங்கெங்கு காணினும் சக்தியடா' என்ற 16 வரியுள்ள பாடலைப் பாடினார். இந்தப் பாடலே பாரதிதாசனைக் கவிஞனாகத் தமிழ் நாட்டிற்கு அடையாளப்படுத்தியது. பொது உடைமைக் கருத்துக்களைக் கவிதைகளில் அதிகம் கையாண்டு எழுதினார். புரட்சிகரமான கருத்துக்களை வெளிப்படுத்தி மூட

நம்பிக்கைகளைத் தகர்க்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தினார். குடும்ப விளக்கு, இருண்ட வீடு, அழகின் சிரிப்பு, இவரது சிறந்த கவிதைத் தொகுப்புகளாகும். கண்ணகி புரட்சிக் காப்பியம், வீரத்தாய், தமிழச்சியின் கத்தி முதலான நாடகங்களையும் எழுதியுள்ளார். இவரது புரட்சிக்கவி, பில்கணீயத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட சிறந்த படைப்பாகும்.

## பாடல் : 1. உலக ஒற்றுமை

**பொருள் விளக்கம் :**

தன் பெண்டு, தன் பிள்ளை சோறு, வீடு, சம்பாத்யம் என்ற சின்னதொரு கடுகு போல் உள்ளம் கொண்டோன் - பயனற்ற சிறியவினன் - தன்னலமா என் சிற்றூர் என் போனுள்ளம் கடுகுக்கு நேர் இந்த துவைக்குள்ளம் - பிற நாட்டைத் துன்புறுத்தும் ஆயுதங்கள் பரிகரிப்பார் - அமைதி காப்பார் - வீடு நகர் நாடு காக்க பாடுபடுவர் - தூய உள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம் தொல்லுலக மக்களெல்லாம் 'ஒன்றே' என்னும் தாயுள்ளம் - அங்கு சண்டையில்லை தன்னலந்தான் தீர்ந்ததாலே என்று உலக ஒற்றுமை பற்றி கூறுகிறார்.

## பாடல் : 2. புத்தக சாலை

**பொருள் விளக்கம் :**

தனிமையில் புத்தகம் வாசிக்கும் பொழுது இயற்கை எழிலை காணவும், இசையை ரசித்தும், அறிஞர்களின் கருத்துக்களில் மனமானது கலந்து நின்று புத்துணர்வு அளிக்கும் வகையில் பெருதவி செய்கின்றன.

மனிதரெல்லாம் அன்புநெறி காண்பதற்கும் - வான் போல் மனோபாவம் விரிவடையவும் - அறியாமை இருளைப் போக்கவும் - எல்லோரும் ஒன்றே என்ற மனப்பான்மை வளரவும் - உயர்ந்த எண்ணம் வளரவும் - புவி முற்றும் மக்கள் புது வாழ்வு வேண்டில் புத்தக சாலை நாட்டிற்கு மிகவும் அவசியம்.

நாடெலாம் தமிழ் மொழியில் சுவடிச்சாலை சர்வகலா சாலையைப் போல் எங்கும் வேண்டும் - பிறமொழி நூல்களை மொழிபெயர்த்து வாசிக்க வைக்க வேண்டும் - கவிதை, உரைநடை போன்ற நூல்கள் - துறை துறையாய்ப் பிரித்தடுக்கி வைத்தல் வேண்டும்.

நூலைந்து விதிகளுக்கு ஒன்றுவிதம் அமைதல் வேண்டும் நூல்கள் எல்லாம் முறையாக அமைத்து நொடிக்கு நொடி ஆசிரியர் உதவுகின்ற வகையில் இருத்தல் வேண்டும் - முனைவிலோர் இருநூலும் புது நூலாயின் தலைப்பில் சுமந்து வந்தவாறு தருதல் வேண்டும்.

வாசிக்க வருபவரின் வருகை ஏற்றும் - மரியாதை காட்டி அவர்க்கு இருக்கை தந்தும் கேட்ட நூல்கள் தந்தும் - புதிய நூல்கள் இருப்பின் அது பற்றி எடுத்துரைக்கும் - நாளும் நூலை நேசித்து வருவோர்கள் பெருகும் வண்ணம் - எண்ணம் செயல் உடலாலும் தொண்டு செய்தால் இச்சமுதாயம் சீர் பெற்று மனிதவாழ்வு மேம்படும்.

## வினாக்கள்

I. ஒரிரு சொற்களில் விடைதருக:

1. பாரதிதாசனின் இயற்பெயர் யாது?
2. பாரதிதாசன் எங்கு எப்போது பிறந்தார்?
3. பாரதிதாசனைக் கவிஞனாகத் தமிழகத்திற்கு அடையாளம் காட்டிய பாடல் எது?
4. புரட்சிக் கவிஞர் எனப் போற்றப்படுபவர் யார்?

II பின்வரும் வினாக்களுக்கு 30 சொற்களில் விடைதருக:

5. பாரதிதாசன் பெற்ற பட்டங்கள் எவை?
6. பாரதிதாசன் இயற்றிய நூல்களைக் குறிப்பிடுக.
7. புத்தக சாலையின் பயன்கள் பற்றி பாரதிதாசன் கூறுவன யாவை?

III பின்வரும் வினாக்களுக்கு 100 சொற்களில் விடை தருக.

8. உலக ஒற்றுமை குறித்து பாரதிதாசன் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

9. புத்தக சாலை எவ்வாறு இருக்க வேண்டும் என பாரதிதாசன் குறிப்பிடுகிறார்?

IV பின்வரும் வினாக்களுக்கு 300 சொற்களில் விடை தருக.

10. மனித வாழ்வு மேம்பட புத்தக சாலையின் தேவை குறித்து பாரதிதாசன் கூறுவனவற்றைக் கட்டுரைக்க.

## 3. ஒற்றுமையே உயிர்நிலை

- கவிமணி ஏ. தேசிக விநாயகம்பிள்ளை.

ஆசிரியர் குறிப்பு:

கவிமணி ஏ. தேசிக விநாயகம் பிள்ளை 1876-ஆம் ஆண்டில் தேரூரில் பிறந்தவர். இவர் கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவிலைச் சார்ந்தவர். தமிழ் இலக்கிய உலகில் புதிய வழியை இவரது கவிதைகள் உருவாக்கின. பழமையிலிருந்து புதுமை காணல் என்பதுதான் இவரது கவிதையின் சிறப்பு. நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம், காந்தளூர்ச்சாலை, மலரும் மாலையும், ஆசிய ஜோதி ஆகியன இவரது குறிப்பிடத்தக்க படைப்புகளாக விளங்குகின்றன. பாரசீகக் கவிஞரின் உமர்கய்யாம் பாடல்கள், அழகம்மை ஆசிரிய விருத்தம், கதர் பிறந்த கதை, குழந்தைச் செல்வம், தேவியின் கீர்த்தனங்கள் என்ற இசைப்பாடல் முதலான படைப்புகளும் குறிப்பிடத்தக்கனவாகும். "தேசிக விநாயகத்தின் கவிப்பெருமை தினமும் கேட்பது என் செவிப்பெருமை" என நாமக்கல் கவிஞரால் பாராட்டப் பெற்றவர். 1940-ல் சென்னைப் பல்கலைக்கழகம் இவருக்கு

'கவிமணி' என்ற பட்டம் வழங்கி சிறப்பித்தது. ஆசிரியராகப் பணியாற்றியவர். 'மலரும் மாலையும்' எனும் தொகுதியில் இடம்பெற்றுள்ள 'ஒற்றுமையே உயிர்நிலை' என்ற கவிதை நம் பாடப்பகுதியாக அமைந்துள்ளது. தமிழ் இலக்கிய உலகில் தனி இடம் பெற்ற கவிமணி 1954 - ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

## ஒற்றுமையே உயிர்நிலை

பொருள் விளக்கம் :

* "நாம் அனைவரும் ஒற்றுமையாக உழைத்திடுவோம்; நாட்டில் ஒருவர்க்கொருவர் உற்ற துணைவராய் வாழ்ந்திடுவோம் வெற்றுரை பேசித்திரிய வேண்டாம்; இன்னும் வீணாய்ப்புராணம் விரிக்க வேண்டாம்.

* கூடி விருந்துண்ணும் படியும் நாம் வேண்டவில்லை. பெண்ணைக் கொண்டு கொடுக்கவும் வேண்டவில்லை. பெண் கொள்ளல் கொடுத்தல் ஆகிய மணவினை எதுவுமின்றியே எவரோடும் விரும்பி நட்புக் கொண்டவர்களாக நாட்டின் நன்மைக் குழைப்பதில் யாருக்கும் நட்டம் உண்டாகுமா?

* கீரியும் பாம்புமாய்ச் சண்டையிட்டுக் கொண்டு, சாதி கீழென்றும் மேலென்றும் வாதம் புரிந்து நிலைநாட்டிவிட்டுப் பின்னர் "பாரதத்தாய் பெற்ற மக்கள் நாம்" என்று தினம் பல்லவி பாடுவதால் விளையும் பயன் எதுவோ?

* வேதனாகிய நான்முகன் முகத்தில் உதித்தவரே இங்கு மேலாய் உயர்ந்த குலத்தினராம்; அவன் பாதத்தில் [கால்களில்] தோன்றிய பாவியரே என்றும் மாநிலம் இழிந்த அடிமைகளாம்."

* பாம்புக்கு வாயில் விஷம் உண்டு, கொட்டும் தேளுக்கு வாலில் விஷம் உண்டு. தாயிற்சிறந்த பிரம்மனுக்கும் இருகாலில் விஷமுண்டோ? சொல்லுங்கள்.

* உச்சி மரத்தில் சுவைக்கனியும், வேர்ப்பகுதியில் நச்சுக்கனியும் பழுத்த பலாமரத்தை நாட்டில் எங்கும் கண்டது உண்டோ?

* இப்படி ஒரு கருத்து நாட்டில் நிலவுகின்றதே; இது, ஆதி இறைவன் வகுத்ததுவோ? அல்லது மக்களிற் சிலர் ஆக்கிய கற்பனை தான் இதுவோ? சாதி இரண்டொழிய வேறுளதோ? ஔவைத் தாயின் மொழியும் நீவிர் மறந்திரோ?

* நாயனாராகிய வள்ளுவர் வந்த திருக்குலத்தை, உயர் நந்தனார் வந்த பெருங்குலத்தைத் தீயகுலம் எனத்தள்ளி விட்டால் அது தெய்வம் பொறுக்கும் செயலாமோ?

* "வேதியராலே மழைவரும்" என்றால் வயல் வேலை செய்யாது விளைந்திடுமோ? அவரவர் தம் பங்குக்குச் செய்கின்ற வாதங்களையெல்லாம் மூட்டை கட்டி வைத்திடுவோம் ஒற்றுமையுடன் வாழ்வதை வேட்கைகொண்டு நாம் உழைத்திடுவோம்

* வீட்டுக்குள் சண்டைகள் போடுவது ஏன்? உங்கள் சண்டையால் வீட்டின் கூரை வெந்து விழுவதை நீங்கள் காணவில்லையா? நாட்டுக்கு நன்மையை நாடுபவர் இந்த நாடகம் ஆடுதல் நகைப்புக்குரியதன்றோ?

* மனமே வாழ்வின் உயர்நிலையாகும்; அதை மாசுறச் செய்தல் கொடிய கொலைச் செயலாகும். "ஈனச் சாதி" என்ற பேச்சினைப் போல நெஞ்சை ஈர்ந்திடும் வாள் ஒன்று வேறுளதா?

* மன்னுயிர்க்காக உழைப்பவரே இந்த மாநிலத்தில் உயர்ந்த குலத்தினராவர்; தன்னுயிரை மட்டும் காத்துக் கொள்பவர்கள் என்றும் தாழ்ந்த குலத்திற் பிறந்தோர் ஆவர்."

# வினாக்கள்

I. ஓரிரு சொற்களில் விடை தருக:

1. தமிழ் நாட்டில் 'குழந்தைக் கவிஞர்' எனும் சிறப்பினை முதலில் பெற்றவர் யார்?
2. ஒற்றுமையே உயிர்நிலை எனப்பாடும் கவிஞர் யார்?
3. இந்த மாநிலத்து ஓங்கும் குலத்தினர் யார்?
4. தாழ்ந்த குலத்தில் பிறந்தோர் யாவர்?
5. கவிமணி எங்கு எப்போது பிறந்தார்?

II. பின்வரும் வினாக்களுக்கு 30 சொற்களில் விடை தருக.

6. கவிமணியின் கவிதை நூல்கள் நான்கினைக் குறிப்பிடு.
7. கவிமணி நாட்டில் நிலவும் சமூக ஏற்றத் தாழ்வினை எங்ஙனம் வெளிப்படுத்துகிறார்?

III. பின்வரும் வினாக்களுக்கு 100 சொற்களில் விடை தருக.

8. கவிமணி சி. தேசிக விநாயகம் பிள்ளை பற்றி விளக்கம் தருக.
9. இடம் சுட்டி பொருள் விளக்கம் தருக.

" கூடி விருந்துண்ண வேண்டவில்லை - பெண்ணைக்
கொண்டு கொடுக்கவும் வேண்டவில்லை. "

10. " வாதமெல்லாம் கட்டி வைத்திடுவோம் - ஒத்து
வாழ்வதை மேற்கொண்டுழைத்திடுவோம் "

IV. பின்வரும் வினாக்களுக்கு 300 சொற்களில் விடை தருக.

11. ஒற்றுமையே உயிர்நிலை எனப்பாடும் கவிமணியின் கருத்துக்களை விளக்கி வரைக.

## 4. முல்லை நதிக்கரை வயல்களுடன் ஒரு மறுவிவாதம்

- நா. காமராசன்

ஆசிரியர் குறிப்பு:

'கறுப்பு மலர்கள்' கவிதைத் தொகுதி மூலம் தமிழ்க் கவிதை உலகில் அறிமுகமானவர். நா. காமராசனின் 'புல்' கவிதை பிரசித்தமானது. தாஜ்மஹாலும் ரொட்டித் துண்டுகளும், சகாராவைத் தாண்டாத ஒட்டகங்கள், மலையும் நதிகளும், ஆப்பிள் கனவு, காட்டுக் குறத்தி போன்றவை இவரது புகழ் பெற்ற கவிதைத் தொகுதிகளாகும்.

(கல்லூரியில் ஸ்ட்ரைக் விடுமுறை நாட்களில் ஒரு ஞாயிற்றுக் கிழமையின் சந்தியா காலத்தில் கவி - முல்லை நதிக்கரையில் வயல்களோடு விவாதிக்கத் தொடங்குகிறான். மறுநாள் விவாதம் வளர்கிறது. வயல்கள் ஒரு சபதம் ஏற்கின்றன. இந்தக் கவிதையை 'சோசலிசக் கனவுகளின் முதல் பிரசவம்' என்று கூட நீங்கள் அழைக்கலாம்.

### முல்லை நதிக்கரை வயல்களுடன் ஒரு மறுவிவாதம்

பொருள் விளக்கம்:

இன்றைய ஆட்சியில் விவசாய விளைநிலங்களின் நிலையினையும் வர்க்க வெறிச் சைத்தான்கள் முதலாளித்துவ புலியை மூடிவைத்த கூண்டுகளாய் முளைத்தவர்கள் மூலதனப் பெருங்காற்றில் மூடுதிரை போட்டவர்கள்.

பாரீரின் தலைநகரம் பசிப்பிணிகள் திருமிராஜ்யம் சாகாத வரம்பெற்ற சரித்திரத்தின் பொன்கோட்டை அரிக்கவரும் அறியாமைக் கறையான்கள்.

காலமெனும் பெருவெளியில் காற்றைப் போல் நீரைப் போல் சேர்ந்திடுவோம் என்று ஒவ்வொருவரும் சபதம் ஏற்போம். இல்லையெனில் "ஏழைகளின் அடுப்பெரிப்போம்" இல்லையெனில் சூரியனில் தீக்குளிப்போம்." என்கிறார்.

## வினாக்கள்

I. ஓரிரு சொற்களில் விடை தருக:

1. 'கறுப்பு மலர்கள்' கவிதைத் தொகுதி மூலம் தமிழ்க் கவிதை உலகில் அறிமுகமானவர் யார்?
2. "சோசலிசக் கனவுகளின் முதல் பிரசவம்" என்பது எது?
3. நா. காமராசனின் பிரசித்தமான கவிதை எது?

II. பின்வரும் வினாக்களுக்கு 30 சொற்களில் விடை தருக.

4. நா. காமராசன் இயற்றிய கவிதைத் தொகுதிகளைக் குறிப்பிடுக.

III. பின்வரும் வினாக்களுக்கு 100 சொற்களில் விடை தருக.

5. இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

"ஏழைகளின் அடுப்பெரிப்போம்
இல்லையெனில் சூரியனில்
தீக்குளிப்போம்."

6. "முல்லை நதிக்கரை வயல்களுடன் ஒரு மறுவிசாரம்" என்ற கவிதை புலப்படுத்தும் சமூக நிலையினை விவரி.

## வாழ்வியல்

### 1. எல்லாம் நானே

- கண்ணதாசன்.

ஆசிரியர் குறிப்பு:

சிவகங்கை மாவட்டம் சிறுகூடல் பட்டியில் 24-06-1927-ஆம் ஆண்டில் பிறந்தார். இந்த நூற்றாண்டின் தலைசிறந்த கவிஞர்களில் ஒருவர். 1978 முதல் அரசவைக் கவிஞராக விளங்கியவர். மாங்கனி, ஆட்டனத்தி ஆதிமந்தி ஆகியன இவரது கவிதை நாடகங்கள். கைப்பாவை, அர்த்தமுள்ள இந்து மதம் இயேசு காவியம், சேரமான் காதலி [நாவல்] முதலியன

இவரது புகழ்பெற்ற படைப்புகள். புகழ்பெற்ற தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியர். சண்டமாருதம், தென்றல், முல்லை இதழ்களின் ஆசிரியர். அனார்கலி, இலங்கைச் சீமை, ராஜ தண்டனை போன்ற நாடகங்களை எழுதியவர். 1980-இல் சாகித்திய அகாதமி விருது பெற்றவர். உலக அளவில் புகழ்பெற்ற கவிஞர் கண்ணதாசன் 17-10-1981-ஆம் ஆண்டில் அமெரிக்காவில் இயற்கை எய்தினார்.

## எல்லாம் நானே

பொருள் விளக்கம் :

மனிதன் என்பவன் பணிந்து அடக்கத்துடன் இருக்க வேண்டும். அனைத்தும் நானே என்று எண்ணும் மனிதன் அழிந்து போவான்.

இந்த பூமியில் கல்லாதவரும் கனிவுடன் நடந்தால் நல்லோர் மதிக்க நயம்பட வாழ்வர் என்றும் கூறுகிறார். இந்த கவிதை வரிகளில் அடக்கமுடையவருக்கும் ஆணவத்தால் அழியும் மனிதருக்கும் உள்ள வேறுபாட்டை உணர்த்துகிறது.

வல்லோன் நானென்றுகூறி நல்லோர் வாழ்விலும் இழிவினைப் பரப்பும் மனிதர்களைச் சாடும் போக்கினை உணரலாம்.

வெற்றியோ தோல்வியோ விதிப்படி வரட்டும் என்று கண்ணதாசன் கூறுவது, அவருடைய இறை நம்பிக்கையை வெளிப்படுத்துவதாக உள்ளது.

நல்வழியில் நம்மை நடத்திக் கொண்டால் தெய்வம் உன்னைத் தேடிவரும் என்பது கண்ணதாசனின் கொள்கையாகும். இறைவன் ஒருவன் ஆட்டுவதால் நாமெல்லாம் ஆடுகிறோம் என்று குறிப்பிடுகிறார்.

குழந்தை கேட்டபிறகு எந்தத் தாயும் பாலூட்டுவதில்லை. அது போலத்தான் ஆண் - பெண் அன்பின் பகிர்வும் இருக்க வேண்டும் என்கிறார்.

## வினாக்கள்

I. ஒரிரு சொற்களில் விடை தருக :

1. கண்ணதாசன் எங்கு எப்போது பிறந்தார்?

2. கவியரசு என்ற பட்டம் யாருக்கு வழங்கப்பட்டது?

3. இயேசு காவியத்தை இயற்றியவர் யார்?

4. கண்ணதாசனுக்கு எந்த ஆண்டு சாகித்திய அகாதமி விருது கிடைத்தது?

II பின்வரும் வினாக்களுக்கு 30 சொற்களில் விடை தருக.

5. கவிஞர் கண்ணதாசனின் கவிதை நாடகங்களைக் குறிப்பிடு.

6. கண்ணதாசனின் படைப்புகள் நான்கினைக் கூறு.

7. கண்ணதாசன் நடத்திய இதழ்கள் யாவை?

III பின்வரும் வினாக்களுக்கு 100 சொற்களில் விடை தருக.

8. கவிஞர் கண்ணதாசன் பற்றி குறிப்பு வரைக.

IV பின்வரும் வினாக்களுக்கு 300 சொற்களில் விடை தருக.

9. கவிஞர் கண்ணதாசன் தாம் நடைமுறை வாழ்வில் கண்ட மனிதர்களை எவ்வாறு பதிவு செய்துள்ளார்?

## 2. மழைக் குறிப்பு

### - தாமரை

ஆசிரியர் குறிப்பு :

இவரது கவிதைத் தொகுப்பு 'ஒரு கதவும் கொஞ்சம் கள்ளிப்பாலும்' என்பதாகும். சந்திரக்கற்கள் என்ற சிறுகதைத் தொகுப்பினையும் வெளியிட்டுள்ளார். வெகுஜனப் பத்திரிகைகளில் எழுதிவரும் இவர் பெண்ணியச் சிந்தனைகளை வலியுறுத்தி எழுதி வருகிறார். திரையிசைப் பாடல்கள் எழுதுவதிலும் ஆற்றல் பெற்ற

கவிஞர். கோவை மாவட்டத்தைச் சார்ந்த இவர் சென்னையில் வசித்து வருகிறார். இவர் பொறியியல் பட்டதாரி. மாணவப் பருவத்திலேயே எழுத்தாளராக, கவிஞராக வளரத்தொடங்கியவர் கவிஞர் தாமரை.

## மழைக்குறிப்பு

- தாமரை

**பொருள் விளக்கம்:**

'மழைக் குறி' கண்டு மகிழ்கிறது நெஞ்சம். அதன் தொடர்பாக எங்கெங்கே என்னென்ன நிகழும் என்பதையும் எண்ணிப்பார்க்கிறது மனம்.

மழைமேகம் கண்டு மயில்கள் தோகை விரித்தாடும் வானம் பார்த்த உழவர்கள் வயலை விட்டு வீடு நோக்கி வேக நடை போடுவார்கள்; மழைத்துளிகளைச் சின்னக் கிண்ணங்களில் சேகரிப்பதற்கு அக்கா மகன் ஆயத்தமாவான். பூண்டு சேர்த்த பொரியை விரும்பும் அப்பாவுக்காக இந்நேரம் பூண்டு உரித்துக் கொண்டிருப்பாள் அம்மா. இப்படி எழும் நினைவுகளுக்கிடையே நெருடலாய் வந்து நுழைந்தது மற்றுமொரு நினைவு, "அன்றாடம் வேண்டியிருக்கும் அரை வயிற்றுக் கஞ்சிக்காகச் சுருங்கிய கைகளோடு சூடம் விற்கும் தாயம்மாக் கிழவியை நினைத்தால் தான்..." என்ற வரிகள் மனித நேயத்தின் வெளிப்பாடாக அமைகிறது.

## வினாக்கள்

I. சிறு சொற்களில் விடை தருக:

1. மழைக் குறிப்பு பற்றிப் பாடிய புதுக் கவிஞர் யார்?
2. மழைக் குறிப்பு எந்தக் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது?
3. 'மழைக் குறிப்பு' கவிதையின் மையக்கருத்து என்ன?

II. பின்வரும் வினாக்களுக்கு 30 சொற்களில் விடை தருக.

4. கவிஞர் தாமரை பற்றி குறிப்பு வரைக.

III பின்வரும் வினாக்களுக்கு 100 சொற்களில் விடை தருக.

5. 'மழைக் குறிப்பு' எனும் கவிதை வெளிப்படுத்தும் மனித நேயத்தை புலப்படுத்துக.

## 3. முளைக்காத புதையல்

- க்ருஷாங்கினி.

ஆசிரியர் குறிப்பு :

இயற்பெயர் பிருந்தா. 1982-ஆம் ஆண்டிலிருந்து எழுதத் தொடங்கியவர். கானல், சதுரம் இவரது கவிதைத் தொகுப்புகள் ஓவியங்களைப் பற்றி கட்டுரைகள் எழுதியுள்ளார். பெண் எழுத்தை ஊடகங்களுக்குக் கொண்டு செல்வதிலும் அடையாளப்படுத்துவதிலும் வேகமாகச் செயல்பட்டு வருபவர். 50-க்கும் மேற்பட்ட பெண் படைப்பாளர்களின் கவிதைகளைத் தொகுத்து பறத்தல் அதன் சுதந்திரம் எனும் நூலாக வெளியிட்டுள்ளார்.

### முளைக்காத புதையல்

பொருள் விளக்கம் :

மனித வாழ்வு இயற்கையின் அடிப்படையிலேயே அமைகின்றது. பிறப்பு - இறப்பு, பழமை - புதுமை இவையாவும் கால மாற்றத்தின் இயற்கை நிகழ்வே.

மனித வாழ்வின் அடிப்படை ஆதாரம் நிலத்தின் மூலமே கிடைக்கின்றது என்பதனை ஒரு சிறு பிள்ளையின் உரையாடலின்

வழி கவிஞர் உணர்த்துகிறார்.

"பல் விளக்குடா சீக்கிரம் அப்பா நீர் எங்கிருந்து கிடைக்கிறது? பூமியில் இருந்துதான். தீர்ந்தே போகும் நீர்? திரும்ப பூமிக்கே - செடி எப்படி முளைத்தது? புதைத்த விதை - யிலிருந்து - விதை எப்படிப் புதைந்தது? முளைத்த செடியிலிருந்து. மண்ணிலிட்டவை எல்லாம் முளைக்குமா? என்ற ஒரு பிள்ளையின் கேள்வியின் மூலம் வாழ்வின் அடிப்படை 'நிலம்' என்பதனை அறிவுறுத்துகிறார். மேலும், இயற்கையில் உள்ள அனைத்தும் செடி, மரம், கொடி, நீர் இவை எல்லாமே ஒன்றையொன்று சார்ந்தே அமைகின்றது. அவ்வகையில் மனிதன் வாழ்வு மேம்பட, பண்பட முன்னோர்களின் அறிவுரைகளே வழிநடத்தும். "மூத்தோர் சொல் கேள்" என்ற வாக்கிற்கேற்ப நம் வாழ்க்கையை வழிநடத்துகிறோமா? என்றால் அது கேள்விக்குறி உள்ளவதை இக்கவிதையின்,

"அன்று புதைத்த என் தாத்தாமட்டும்
ஏன் இன்னமும் முளைக்கவே இல்லை"

என்ற ஒரு பிள்ளை வினா எழுப்புவதின் வழி இன்றைய சமுதாயத்தில் முன்னோர்களின் அறிவுரைகளை யாரும் பின்பற்றி நடப்பதில்லை என்பதனை உணர்த்துகிறது. முளைக்காத புதையலாக நம் முன்னோர்கள் உள்ளதை எடுத்துரைக்கிறது.

## வினாக்கள்

I ஓரிரு சொற்களில் விடை தருக :

1. கவிஞர் க்ருஷாங்கினியின் இயற்பெயர் யாது?
2. 'பறத்தல் அதன் சுதந்திரம்" என்ற நூலின் ஆசிரியர் யார்?

II. பின்வரும் வினாக்களுக்கு 100 சொற்களில் விடை தருக:

3. முளைக்காத புதையல் எனும் கவிதை புலப்படுத்தும் வாழ்வியல் கருத்தை விளக்குக.